முடிந்த எல்லா விவசாயத் தொழிலாளர்களுக்கும் கொடுக்க வேண்டும். வருடத்திற்கு 4 மாதங்கள்தான் அவர்களுக்கு வேலை இருக்கும், மற்ற நாட்களில் அவர்களுக்கு வேலை இல்லை. எனவே 60 வயது முடிந்த அனைவரும் பென்ஷன் வாங்கத் தகுதி பெற்ற வர்கள் என்று கருதி, அனைவருக்கும் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அனைவருக்கும் உதவித் தொகை கொடுக்க வேண்டும் என்றால், நம்முடைய நிதி நிலையையும் பார்க்க வேண்டும். ஒவ்வொரு முதியோருக்கும் ஆண்டுக்கு 860.50 ரூபாய் கொடுக்கிறோம். நபர் ஒன்றுக்கு ஒரு வருஷத்திற்கு உதவித் தொகை ரூ. 420.00, ஆண்டுக்கு இரு முறை வேட்டி, புடவை ரூ. 60.00; வாரம் அரை கிலோ அரிசி ரூ. 52.00; ரூ. 0.90 பைசா வீதம் மதிய உணவிற்காக ரூ. 328.50. எனவே அரசின் மூலமாக கிடைக்கும் உதவித் தொகை ரூ. 860.50. ஆகவே இந்த அடிப் படையை வைத்துக் கொண்டு நாம் நிதிநிலைமையை வரையறுத்து அதற்கேற்றவாறு கொடுத்துக் கொண்டு வருகிறோம்.

திரு. ஜி. மூர்த்தி : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஓய்வு ஊதியம் பெறுவதற்காகத் தகுதி பெற்றவர்களின் பட்டியலைச் சேகரிக்க அந்தந்த வட்டாரத்திலே உள்ள கிராம சேவக்குக்குத் தாக்கீது அனுப்பி, அவர்கள் மூலம் பட்டியலைத் தயாரித்து அரசுக்கு அனுப்ப ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : தலைவர் அவர்களே, அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும்.

கால்நடைத் துறையிலுள்ள நோய்த்தடுப்பு புலனாய்வுப் பிரிவு

* வினா எண். 60—திரு. எம். கே. ராஜமாணிக்கம் : மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கால்நடைத் துறையில் நோய்த்தடுப்பு புலனாய்வு பிரிவு இயங்குகிறதா?

(ஆ) அவர்களுக்குப் பணி வரையறுக்கப்பட்டுள்ளதா?

(இ) நோய்த் தடுப்புப் பணியை வேறு யார் யார் கவனிக்கிறார்கள்?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன் : (அ) ஆம்.

(ஆ) ஆம்.

(இ) நோய் வளர்ச்சி பற்றி அறிந்தவுடன் அருகில் உள்ள கால்நடை மருத்துவமனை கால்நடை உதவி மருத்துவர் அந்த கிராமத்திற்குச் சென்று நோய் தன்மை பற்றி அறிந்து, நோயுற்ற

கால்நடைகளுக்குச் சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்யப்படுகிறது. தேவையான தடுப்பு மருந்து இராணிப்பேட்டை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் தயாரிக்கப்பட்டு பெறப்படுகிறது. நோய்த் தன்மை அறிந்தவுடன் கால்நடை உதவி மருத்துவர், தடுப்பூசியாளர்கள் கால்நடை உதவியாளர்கள் ஆகியோர்கள் மூலம் நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. வெக்கை நோயினை பரவாமல் தடுக்கவும் வெக்கை நோய் தடுப்பு திட்டத்தின் கீழ் 17 மாவட்டக்குழு, 10 விடுப்புக் குழு, 10 சோதனைச் சாவடிகள் முதலியன கால்நடை உதவி மருத்துவர் தலைமையின் கீழ் பணிபுரியும் தடுப்பூசியாளர்கள் மூலம் இயங்கி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு.

கைது செய்யப்பெற்ற உறுப்பினர்கள் விடுதலை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னை நகரக் காவல் ஆணையாளரிடமிருந்து கீழ்க்கண்ட செய்திகள் வரப்பெற்றுள்ளன என்பதைப் பேரவைக்குத் தெரிவிக்கிறேன்:

"I have the honour to inform you that Thiru P. Ponnurangam MLA who was arrested at 9.45 hours today (28-1-1983) in X Station was released in the evening.

I have the honour to inform you that Thiru A. Selvarajan, MLA who was arrested at 10.15 hours today (28-1-1983) in X Station was released in the evening.

I have the honour to inform you that Thiru N.V.N. Somu, MLA who was arrested at 9.30 hours today (28-1-1983) in X Station was released in the evening.

I have the honour to inform you that Thiru A. Rehmankhan MLA who was arrested at 10.15 hours today (28-1-1983) was released in the evening.

I have the honour to inform you that Thiru D. Purushothaman, MLA who was arrested at 10.00 hours today (28-1-1983) in X Station was released in the evening".